பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

★ இரசாயனம் ★
ஆண்டு - 1989 A/L
பகுதி:-
அசேதன இரசாயனம்
ஆசிரியர்:-
திரு. மக்லி
இடம்:-
10, 3ஆவது ஒழுங்கை
A. V. வீதி
கொழும்புத்துறை

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1-50

★ இரசாயனம் ★
வினாவிடை வகுப்பு
ஆண்டு: 1988 A/L
ஆரம்பம்:-
23. 3. 88
WED 4 30 P M
ஆசிரியர்:-
திரு. மக்லி
இடம்:-
10, 3 ஆவது ஒழுங்கை
A. V. வீதி
கொழும்புத்துறை

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு பங்குனி மீ 10 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 04 (23 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:35

# வவுனியாவில் தாக்குதல்; 13 சிங்களவர்கள் பலி!

## யாழ்-கொழும்பு போக்குவரத்து ஸ்தம்பிதம்

— வவுனியாவிலிருந்து சபா புஷ்பநாதன் —

வவுனியா, மார்ச் 23

வவுனியா மாவட்டத்தில் இரண்டு சிங்களக் கிராமங்கள் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் 13 சிங்கள மக்கள் உயிரிழந்தனர்.

இச் சம்பவங்கள் குறித்து தெரியவருவதாவது:

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு 12-30 மணியளவில் முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது.

மதவாச்சிக்குளம் என்னுமிடத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேர் உயிரிழந்தனர்.

இரண்டு மணி நேரம் கழித்து இரண்டாவது தாக்குதல் நடத்தப்பட்டது.

பாவற்குளம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களின் சடலங்கள் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டன. படுகாயங்களுடன் மற்றும் பலர் ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவத்தினைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றநிலை உருவாகியது.

கொழும்பு - யாழ்ப்பாணம் பஸ் போக்குவரத்து முழுமையாக ஸ்தம்பிதமடைந்தது.

நண்பகல் வவுனியாவுக்கு வந்த யாழ் பஸ்கள் உடனடியாக யாழ் திரும்பின.

பொலீஸ்-இராணுவ

[6ஆம் பக்கம் பார்க்க]

சடலங்களைப் பாதுகாக்க

## யாழ். ஆஸ்பத்திரிக்கு புதிய குளிர்சாதனப் பெட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

சடலங்களைப் பழுதடையாது பாதுகாப்பதற்குப் புதிய குளிர்சாதனப் பெட்டி ஒன்று யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பதினேழுலட்சம் ரூபா பெறுமதியான இக்குளிர்சாதனப் பெட்டியைப் போதனா வைத்தியசாலைகள் அமைச்சு வழங்கியுள்ளது.

ஒரே தடவையில் ஆறு சடலங்களைப் பழுதடையாது பாதுகாப்பதற்கான வசதிகள், மேற்படி குளிர்சாதனப் பெட்டியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு குளிர்சாதனப்பெட்டிகள் வழங்கப்பட்டபோதிலும் தற்பொழுது ஒன்றுமட்டுமே யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஓ-10)

# அ'புரத்தில் தாக்குதல் 17 தமிழர்கள் பலி!

## பஸ்ஸோடு வைத்து எரிக்கப்பட்டனரா?

வவுனியா, மார்ச் 23

அனுராதபுரம் - வவுனியா வீதியில், இனந்தெரியாதோர் பஸ் ஒன்றைத் தாக்கியதில் பதினேழு தமிழர்கள் கொலையுண்டதாக அஞ்சப்பட்டது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த பஸ்ஸை வழிமறித்துக் காட்டிற்குள் இட்டுச் சென்று அதில் இருந்த தமிழ்ப் பயணிகளை பஸ்ஸோடு சேர்த்து எரித்ததாக இங்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. எனினும் இந்தத் தகவல் நேற்று மாலை வரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பயணிகள் மூலம் பிரஸ்தாப சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

கொழும்பிலிருந்து வந்த தனியார் பஸ் ஒன்று நேற்றுக் காலை ஈரப்பெரிய குளத்திற்கு அப்பால், அனுராதபுரம் - வவுனியா வீதியில் இனந்தெரியாதோர் சிலரால் வழிமறிக்கப்பட்டு காட்டுக்குள் இட்டுச் செல்லப்பட்டது.

காட்டிற்குள் வைத்து பயணிகளையும் சேர்த்துப் பஸ்ஸுக்குத் தீமூட்டப்பட்டதாகவும், அதிலிருந்து இறங்கி ஓட முயன்றோர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், இந்தச் சம்பவத்தில் மொத்தம் 17 தமிழ்ப் பயணிகள் பலியானதாகவும் அஞ்சப் படுகிறது. மேலும் பலர் இறந்திருக்கலாம் என்றும் பலர் காயமடைந்திருக்கலாம் என

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பலில் அகதிகள் காங்கேசனுக்கு!

## அடுத்த மாதம் 4ம் திகதி தமிழகத்திலிருந்து வருவர்

— அலுவலகச் செய்தியாளர்: அகில்ராஜ் —

யாழ்ப்பாணம், மார்ச் 23

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அடுத்த மாதம் நான்காம் திகதி தொடக்கம், காங்கேசன் துறைக்குக் கப்பல் மூலம் கொண்டுவந்து சேர்க்கப்படுவர்.

அவர்கள் முதலில், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் அமைக்கப்படும் நிரந்தர முகாம் ஒன்றில் தங்க வைக்கப்படுவர்.

பின்னர் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து 1983ஆம் ஆண்டு முதல் 1987 ஜூலை வரை அகதிகளாகத் தமிழகம் சென்றவர்களே காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்பட உள்ளனர்.

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளில் மன்னாரைச் சேர்ந்தவர்கள் கடந்த ஜனவரி தொடக்கம் மன்னாருக்குக் கப்பல் மூலம் அழைத்துவரப்படுவது குறிப்பிடத்தக்கது.

அகதிகளைத் திரும்ப அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை இந்திய உயர் ஸ்தானிகராலயம் செய்து வருவதாக அறிய வந்துள்ளது.

தமிழ்நாட்டில் தங்கியுள்ள அகதிகள் காங்கேசன்துறை வருவது இதுவே முதல் தடவையாகும்.

இதுவரை காலமும் மன்னாருக்கு வந்து கொண்டிருந்த அகதிகள் அனைவரும் மன்னார்ப்பகுதியைச் சேர்ந்தவர்கள்.

காங்கேசன் துறைத் துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட இருக்கும் அகதிகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

முதற்கட்டமாக இரண்டாயிரம் அகதிகள் காங்கேசன்துறைக்குக் கூட்டி வரப்படுவர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் ஏற்படுத்தப்பட்டு வரும் விசேட மண்டபத்தில் இவர்கள் தங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

அந்த மண்டபத்தில் சகல அகதிகளும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

இதே வேளை அகதிகளாக நாடு திரும்பும் ஒவ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி வெங்கட் சந்திப்பு

சென்னை, மார்ச் 23

தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி நேற்று ஜனாதிபதி இராமசாமி வெங்கட்ராமனை சந்தித்துப் பேசினார்.

அரை மணித்தியாலம் இச்சந்திப்பு நீடித்தது.

(ஓ-எ)

முச்சந்தி முரளி



கொழும்பிலிருந்து காங்கேசனுக்குக் கப்பலிலே அகதிகளாய் வந்த காலம் மாறி, தமிழ்நாட்டிலேயிருந்து காங்கேசனுக்குத் திரும்பி வாற காலமாய்ப் போச்சுது பாத்தியளே......!

## நல்லூரில் உதவிப் பணம் பெறலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1987ஆம் ஆண்டு புரட்டாதிமாதம் தொடக்கம் மார்சழி மாதம் வரை அரச உதவிப் பணம், சயரோக நிவாரணப் பணம் பெறுகவர்கள் உடன் நல்லூர் உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் மேற்படி பணம் வழங்கப்பட்டு வருகிறது.

[ஓ-10]

## யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கறுப்புப் பட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 23

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கறுப்புப் பட்டி அணியும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

★ தடைப்பட்ட ஜீ. சி. ஈ. சாதாரணதரப்பரீட்சையை உடன் நடத்துக.

★ தடுப்புக் காவலில் உள்ள மாணவர்களை உடன் விடுதலை செய்க.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த இயக்கம் நடத்தப்படுகிறது.

யாழ்ப்பாணம் தவிர்ந்த மற்றைய பகுதிகளில்

## வாந்திபேதி வேகமாகப் பரவி வருகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ் மாநகர சபைப் பகுதியைத் தவிர்ந்த குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வாந்திபேதி நோய் வெகுவேகமாகப் பரவிவருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இன்றுவரை ஐநூறுக்கும் மேற்பட்டோர் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக ஊர்ஜிதப் படுத்தப்பட்டுள்ளது.

வாந்திபேதி நோய் அறிகுறிகள் கண்டதும் நோயாளர்களை உடன் அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுமாறு யாழ் மாவட்ட சுகாதார சேவைப்பகுதி பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டு வீட்டில் இருந்த பலரின் சிகிச்சை இன்றிச் சிலர் இறந்துள்ளனர் என்றும் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

[ஓ-10]

ஓர் அரிய சந்தர்ப்பம்!

தவற விடாதீர்கள்!!

கலர் படச்சுருள் கழுவுதல்

முற்றிலும் இலவசம்!

* கலர் பிரதி ஒன்றுக்கு ரூபா 4/75 மட்டுமே.
* தரமான பிரதி
* 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்.
* ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையுண்டு.

தொடர்பு:

SHABRA
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

### சுபநேரம்

23-03-1988
பங்குனி 10
புதன்கிழமை

சுபநேரம்:
4 46 முதல் 6.16 வரை

ராகுகாலம்:
12.16 முதல் 1.46 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

ஷஷ்டி விரதம்

## புலிகள் பிரமுகர் ஜொனி சுட்டுக்கொலை!

கொழும்பு, மார்ச் 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பிரமுகரான ஜொனி என்பவர் இந்திய அமைதிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியப் படையினரால் சென்னையிலிருந்து வவுனியாவுக்கு ஜொனி அழைத்து வரப்பட்டார்.

அப்போது எதேச்சையான முறையில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று புதுடில்லியில் அரசப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

இதே வேளை—

இது சம்பவம் பற்றி ஏஜென்சி செய்தி அறிக்கையொன்றில் பின் வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இந்திய இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டு தவறி போய் ஜொனியின் உயிரைக் குடித்ததாக இந்திய இராணுவத்தினர் கூறுகின்றனர்.

ஆனால், ஜொனி வவுனியாவில் கைதிகளில் சென்றுகொண்டிருந்த போது இந்திய இராணுவத்தினரால் குறிவைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்— என்று அறிக்கை கூறுகிறது.

(அ-எ)

## பரீட்சையை நடத்தக் கோரி ஊர்வலம்

கரவெட்டி, மார்ச் 23

கடந்த டிசம்பரில் தடைப்பட்ட ஜீ. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சையை நடத்தக் கோரி வடமராட்சி மாணவர் ஒன்றியம் ஊர்வலம் ஒன்றை நடத்த இருக்கிறது.

இம்மாதம் 25 ஆம் திகதி இதனை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, குஞ்சர்கடை ஆகிய இடங்களில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் மந்திகையில் முடிவடையும் என்று மாணவர் ஒன்றிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(இ-70)

## சீசன் டிக்கெட் 28 முதல் விநியோகிக்கப்படும்

யாழ்ப்பாணம் மார்ச் 23

அசம்பாவிதங்கள் காரணமாக கடந்த மூன்று மாத காலமாக விநியோகிக்கப்படாமல் இருந்த வயது வந்தவர்கள், பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சீசன் டிக்கெட்டுகள் இம்மாதம் 28ஆம் திகதி முதல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரால் வழங்கப்பட இருக்கின்றன.

யாழ் சபையின் களஞ்சிய அறையில் இருந்த சீசன் டிக்கெட்டுகள் அசம்பாவிதங்களை அடுத்து காணாமற்போய் இருந்தன.

ஆதலால் சீசன்டிக்கெட் விநியோகத்தில் மோசடி இடம்பெறக்கூடாது என்பதற்காகவே சபைத்தலைவர் கடந்த மாதங்களுக்குரிய சீசன் டிக்கெட் விநியோகத்தை இடைநிறுத்தம் செய்திருந்தார்.

தற்பொழுது சபைத்தலைவரது துரித நடவடிக்கையினால் கொழும்பிலிருந்து சீசன் டிக்கெட்டுகள் அச்சடிக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டுள்ளன.

(இ)

அமைதிப் படையின்

## மட்டுநகர் முகாமுக்கு குண்டு வீசப்பட்டது

கொழும்பு மார்ச் 23

மட்டக்களப்பில் நேற்று இந்திய அமைதிப் படை முகாம் மீது குண்டு வீசப்பட்டது.

இதில் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

மட்டக்களப்பு ஆயர் இல்லத்திற்கு அருகில் இம்முகாம் இருக்கின்றது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஆயர் இல்லத்தில் இருந்தவர்கள் வெளியேற்றப்பட்டு பின்னர் சோதனையிடப்பட்டது.

(ஓ-எ)

அலுவலக இடம் மாற்றம்

வரையறுக்கப்பட்ட
ஹட்டன் நஷனல் வங்கி
(HATTON NATIONAL BANK LTD)

மேற்படி வங்கியின் யாழ் கிளை இல 54 ஸ்ரான்லி வீதியிலுள்ள தற்போதைய தற்காலிக அலுவலகக் கட்டிடத்திலிருந்து

இல. 212, 214

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கிளையின் புதுப்பிக்கப்பட்ட நிரந்தர அலுவலகக் கட்டிடத்திற்கு

வாடிக்கையாளரின் வசதி கருதி (23-03-1988)

இன்று முதல்

இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனையும், சகல வங்கி அலுவல்களும் வழமைபோல் மேற்படி ஆஸ்பத்திரி வீதி அலுவலகத்தில் தொடர்ந்து நடைபெறும் என்பதனையும் வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

—முகாமையாளர்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கடைக்குரிய கண்ணாடி அலுமாரி வகைகள் விற்பனைக்குண்டு நகைக் கடைக்கும் ஏற்றது. சுபே பூம்புகார், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2113)

Uplands Farm Ltd கோழிக் குஞ்சு விநியோகம். 23 ஆந் திகதி புதன்கிழமை (Lohmann) சேவல் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். விலை ரூ 4 00. முன்கூட்டியே பதிவு செய்க இல 9 குராவத்தை ரோட், (நந்தாவில் லேன்) சுன்னாகம் (ஸ்டேஷனுக்கு அருகாமையில்) (2082)

Uplands Farm Ltd கோழிக்குஞ்சுகள் 29-03-88 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும் (Lohmann) பிறவுன் பேடு ரூ 12. 50 [Lohmann] சேவல் ரூ4.00 (சொண்டு வெட்டப்பட்டது, தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்யவும் இல 9, குராவத்தை ரோட்டு [நந்தாவில் லேன்] சுன்னாகம் [ஸ்டேஷனுக்கு அண்மையில்] (2655)

பேடுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் (புரொயிலர் குஞ்சுகள் ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு) 25ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். (2106)

சொனி, நஷனல், ரெலிபங்கன், பிலிப்ஸ், சன்யோ, 20" கலர் ரீவி, ரியுனர் Fly Back, சமீனற் நாஷனல் வீடியோ டெக் (300, 370, 7000, 250) செட் Motor RF Converter, மற்றைய உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு. Sony (2764) 27" கலர் ரெலிவிசன் விற்பனைக்குண்டு Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். [2122]

## காணி விற்பனைக்கு

மீசாலை A. P C. கந்தோருக்கு முன்னால் 13 பரப்பு காணி விற்பனைக்குண்டு கிணறு, மலசல கூட வசதி, மற்றும் பிரயோசனங்களும் உண்டு தி. தாமோதரம் பிள்ளை உருபராய் கிழக்கு (2129)

## தேவை

அல்சேஷன் ஆண் நாய்க்குட்டி தேவை விலை உட்பட விபரமாகத் தபால் மூலம் தொடர்பு கொள்க. R. ராமச்சந்திரன். C/ அம்மன் பார்பஸி நியூ மார்க்கட் சாவகச்சேரி. (2108)

வீட்டில் இருந்து வயது போன நோயாளியை பார்ப்பதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பெண் Attendant தேவை. சாப்பாடு தங்கும் இடம் சம்பளம் வழங்கப்படும் அனுபவமுள்ள தாதிகட்கு முன்னுரிமை அளிக்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும். No-12, K கந்தபிள்ளை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (2659)

அனுபவமுள்ள மெஷின் மைண்டர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும் தேவி அச்சகம் 114/19, நாவலர் வீதி யாழ்ப்பாணம் (2664)

## மணமக்கள்தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள் பங்கள ஏஜென்சி சொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம் இலை-K K. செல்லத்துரை கிராமக்கோட்டடி பருத்தித்துறை. (2124)

## மணமகள் தேவை

ஓய்வூதியம் பெறும் முன்னாள் அரசாங்க உத்தியோகத்தரொருவர் (வயது 41, குருகுலம், கத்தோலிக்கர்) Middle east ஐச் சேர்ந்த, 33 வயதிற்கு மேற்படாத, வேலை பார்க்கும் இந்துப் பெண்ணை வாழ்க்கைத் துணையாக்கவிரும்புகிறார். கிறிஸ்தவர்களும் விண்ணப்பிக்கலாம்; சீதனம் முக்கியமில்லை. முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 100, C/o உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2660)

## மணமகள் தேவை

இந்து மகவேளாள குல பெற்றோர் தமது 30 வயது இங்கிலாந்தில் பொறியிலாளராக தொழில் புரியும் (B Sc. Civil Eng), பிரஜா உரிமை உள்ள மகனுக்கு தகுந்த இடத்தில் மணமகள் தேடுகின்றனர். முழுவிபரங்களுடனும் ஜாதகக் குறிப்புடனும் அண்மையில் எடுத்த புகைப்படப் பிரதியுடனும் விண்ணப்பிக்கவும் புகைபடம் திருப்பி அனுப்பப்படும் வி. இ 49 C/o உதயன் (2112)

## மணப்பந்தல்

32 வயதுடைய யாழ் உயர் வேளாளகுல சைவ போசன பட்டதாரி ஆசிரியைக்கு அரச உயர் தொழில் புரியும் 32-40 வயதுக்குட்பட்ட சைவ போசன மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். தொடர்பு உதயன் விளம்பர இல. 92. (1965)

## சேவை

யாழ். சைனீஸ் ரெஸ்ரோறன்ற் (முதலாம் குறுக்குத்தெரு) தினசரி காலை 10மணிதொடக்கம் மாலை 6 - 30 மணி வரை திறந்திருக்கும் சைனீஸ் ரோல்ஸ் புதன்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மட்டும் பெற்றுக் கொள்ளலாம். அல்லது முன்கூட்டி ஓடர் செய்தும் பெற்றுக் கொள்ளலாம். (1906)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises. 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna (Near Samy & Co.) (1803)

## பயிற்சி

Computer பயிற்சிக்கான புதிய பிரிவுகள் 25 - 03 - 1988 காலை 9. 30 மணிக்கு I D P யிலும் Modern Education Centre Karaveddy இலும் மாலை 3 30 மணிக்கு I. D. P Tellippallai இலும் ஆரம்பமாகின்றன. [2105]

---

# பொது மக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய பரிபாலன சபை 10 04 - 88 முதல் சகல நிர்வாக நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கின்றது. எனவே பொதுமக்கள் கோவிலில் அமைந்துள்ள பரிபாலன சபை காரியாலயத்தில் தொடர்பு கொண்டு தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

இப்படிக்கு
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி
அம்மன் ஆலய
பரிபாலன சபை.

நல்லூர்,
யாழ்ப்பாணம். (2125)

---

# தேவை

பிளேட்டின் மெசின் மைண்டர்கள் தேவை
நேரில் வரவும்
செட்டியார் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

## புதுவருட மலிவு விற்பனை

# ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட் றேட்சென்றர்

155, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

பூவோட, துல்டெக்ஸ் சகலவிதமான பப்ளிகைகள் சித்தைவகைகள் பொலியஸ்டர்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

| | | |
|---|---|---|
| (i) சலெஞ்சர் | பொலிபஸ்டர் | - 25 00 |
| (ii) அப்சரு | பொலிபஸ்டர் | - 30 00 |
| (iii) சப்பயர் | பிறிண்டட் | - 30 00 |
| (iv) துல்டெக்ஸ் | கலர்ப்பப்பிளின் | - 18 00 |
| (v) துல்டெக்ஸ் | பிறிண்டட் சித்தை | - 23 25 |
| (vi) துல்டெக்ஸ் | 45" பிறிண்டட் பொலியஸ்டர் | - 30 00 |
| (vii) குண்டன்மால் சட்டின் | | - 38 00 |

---

# யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம்

கடந்தவருடம் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி நடைபெற இருந்த பேற்றடி கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் இடம் பெறவில்லை இக்கூட்டம் 26 - 03 - 88 காலை 9-30 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும். அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பப்படவில்லை.

சு. டிவகலாலா
அழைப்பாளர்
பழையமாணவர் சங்க
செயற்குழுவிற்காக

---

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. - உ.)

# வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட 4500 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து தபால் உறையின் இடது பக்க மூலையில் வெற்றுச்சாக்குக் கேள்வி என எழுதப்பட்டு "பொது முகாமையாளர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு 29 - 3 - 88 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,

21 - 3 - 88 சங்கானை ப[illegible] சங்கம்.

---

# மக்கள் வங்கி

## அடைவு நகைகள் மீளளித்தல்

1. மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, காங்கேசன்துறை, சுன்னாகம், சாவகச்சேரி, புங்குடுதீவு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறைக்கிளைகளில் பணம் செலுத்தி பலாலி, கோட்டை முகாங்களிலிருந்து மீளப்பெறும் அத்தாட்சிக் கடிதங்களை ஏற்கெனவே பெற்ற வாடிக்கையாளர்களினதும்—

2. மக்கள் வங்கி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி, பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளில் பணம் செலுத்திய வாடிக்கையாளர்களினதும்—

நகைகள் பின்வரும் திகதிகளிலும் இடங்களிலும் வைத்து மீளளிப்பு செய்யப்படும் வாடிக்கையாளர்கள் குறித்த திகதியில் காலை 9- 00 மணிக்கு குறித்த கிளையில் தமது அடையாள அட்டையுடனும் வங்கியில் பணம் கட்டிய ரசீது அத்தாட்சிக் கடிதத்துடனும் சமூகமளித்து தமது நகைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

இது சம்பந்தமாக அடைவு வைத்த கிளைகளிலிருந்து கடிதங்கள் தற்போது அனுப்பப்படுகின்றன யாழ் பிரதான வீதி, யாழ் ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளில் பணம் கட்டியும் கடிதங்கள் கிடைக்காதவர்கள் உடனடியாக கிளைகளுடன் தொடர்பு கொள்ளவும்.

| திகதி | நிலையம் (1) மக்கள் வங்கி பிரதான வீதி | நிலையம் (2) மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
|---|---|---|
| 28-3-88 திங்கள் | புங்குடுதீவு நகைகள் யாழ் பிரதான வீதி நகைகள் | யாழ் ஸ்ரான்லி வீதி நகைகள் |
| 29-3-88 செவ்வாய் | சுன்னாகம் நகைகள் | யாழ் ஸ்ரான்லி வீதி நகைகள் |
| 30-3-88 புதன் | சுன்னாகம் நகைகள் | நெல்லியடி நகைகள் |
| 31-3-88 வியாழன் | சுன்னாகம் நகைகள் | நெல்லியடி நகைகள் |
| 4-4-88 திங்கள் | யாழ் பிரதான வீதி நகைகள் | நெல்லியடி நகைகள் |
| 5-4-88 செவ்வாய் | யாழ் பிரதான வீதி நகைகள் | நெல்லியடி நகைகள் |
| 6-4-88 புதன் | யாழ் பிரதான வீதி நகைகள் | பருத்தித்துறை நகைகள் வல்வெட்டித்துறை நகைகள் காங்கேசன்துறை நகைகள் |

மு. கணேசசுந்தரம்
பிரதேச முகாமையாளர்.

---

# அங்கும் தேவை பெர்மிட்

கொழும்பு, மார்ச் 25 அம்பாறை மாவட்ட மீனவர் ஆழ்கடல் சென்று மீன்பிடிக்க அமைதிப்படையிடம் இருந்து பெர்மிட் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்படுகின்றது.

பத்து மைல் கடல் தூரம் சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்படும்?

அம்பாறையைச் சுற்றியுள்ள கடல்பகுதியில் இந்தியக் கடற்படை ரோந்து புரிகின்றது. அதைத் தொடர்ந்து ஆழ்கடல் மீன்பிடித்தல் தடை செய்யப்பட்டிருந்தது (அ-எ)

## ஒரு வருடத்தில் 150 பேர் கடலுக்கு இரை!

கொழும்பு, மார்ச் 23 ஆண்டுதோறும் சுமார் நூற்று ஐம்பது பேர் கடலுக்குப் பலியாகின்றனர் என்று கடற்றொழில் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 30 முதல் 40 வரையான மீனவர்கள் கடலில் காணாமற் போகின்றனர். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது

காணாமற்போகும் மீனவர்களில் பெரும்பாலோர் தென் இலங்கையைச் சேர்ந்தவர்கள். (ஒ-எ)

---

# விசேட அறிவித்தல்

வெளிவாரி பட்டப்படிப்புக்களுக்கான விண்ணப்ப முடிவு திகதி 31—03—1988 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை பேராதனை பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது என்பதை அறியத்தருகிறேன். இந்நிறுவனத்தில்

**G. A. Q. 89** க்கான

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. எனவே 18-3 88ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் விண்ணப்பிக்கவும். நேர அட்டவணை பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது:-

சனி, ஞாயிறு { பி. ப. 1 00-2 00 தமிழ், 2 00-3 00 மெய்யியல் 3 00-4 00 இந்து நாகரிகம் 4 00 5 00 பொருளியல் 5 00-6 00 அரசியல்.

மேலும் விபரங்கட்கு:
நிர்வாகி:

## 'கெயின்ஸ்'

இன்ஸ்ரிரியூட் நெல்லியடி

---

# வெற்றுச் சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 8000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெற்ற விண்ணப்ப படிவங்களில், முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 26-03-88 சனிக்கிழமை ந ப. 12. 00 மணிக்கு முன்னதாக சங்க காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "வெற்றுச்சாக்குக்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடவும்.

**கேள்விப் பத்திர பணவைப்பு ரூபா 500/-**

பொது முகாமையாளர்,
அலவெட்டி மகலாகம் ப. நோ. கூ. சங்கம்

---

# 6ஆம் மாத நினைவஞ்சலியும்

அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு:
19 - 6 - 1919

அகால மறைவு:
29 - 10 - 1987

## அமரர் திருமதி நல்லம்மா இரத்தினம்

திதி: 24 - 3 - 1988

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்த அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி கிரியை 23 3 88 புதன்கிழமையும் வீட்டுக் கிருத்தியம் 24-3-88 வியாழக்கிழமையும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் வேண்டப்படுகின்றார்கள்

கணவன்: செ இரத்தினம்,
(முன்னாள் உரிமையாளர்
இரத்தினம் ஸ்ரோர்ஸ் வெளிமடை)
பிள்ளைகள்: இந்திரதாஸ், ஸ்ரீதரதாஸ், கணேஸ்வரதாஸ்.

இல்லம்:
காவடி தெற்கு, கொக்குவில். (2080)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கே. டானியல்
(மக்கள் எழுத்தாளர்)

| | |
|---|---|
| மக்கள் சேவைக்காக இலங்கை மண்ணில் | மக்கள் சேவை ஆற்றிய பின் இந்திய மண்ணில் |
| பிறப்பு: 25 - 03 - 1927 | இறப்பு: 23 - 03 - 1986 |

ஒரு பொதுவுடமை, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் ஒரேயொரு இலட்சியத்திற்காக தன் வாழ்நாள் முழுக்க மக்களுக்காக பேனா பிடித்து என்றும் மக்கள் அன்பையும், மதிப்பையும் பெற்றவர் நினைவாக.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

76/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (2048)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் கலந்து கொள்ளும் நோக்குடன் அரசியல் கட்சியாக எம்மைபதிவுசெய்யவில்லை

## ஈ.பி.ஆர்.எல்.எவ் இருபாகரன்பேட்டி

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, மார்ச் 23

நாம் தேர்தலில் கலந்து கொள்ளும் நோக்குடன் எம்மை அரசியல் கட்சியாகப் பதிவு செய்து கொள்ளவில்லை. எமக்கு இப்போது தேர்தல் முக்கியம் அல்ல. பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வே தேவையாகும்.

மேற்கண்டவாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் மத்திய குழு உறுப்பினரும் மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான திரு பி. இருபாகரன் உதயன் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் ஐக்கியம் தேவை. தமிழ் அமைப்புகளுடன் ஐக்கியம் தேவை என்ற அடிப்படையில்தான் செயல்படுகின்றோம். இதனையே வலியுறுத்தி வருகின்றோம்.

இந்த ஐக்கியம் பற்றி விடுதலைப் புலிகளுடன் நாம் பேசத் தயாராக இருக்கின்றோம். ஆனால் அவர்களிடம் துப்பாக்கி இருப்பதால் பேச முடியாதவர்களாக இருக்கின்றோம்.

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை நாம் கொள்கையளவில் தான் ஏற்றுள்ளோம். அதிகாரப் பரவலாக்கம் உட்பட எந்த ஒரு விடயமும் எம்மிடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

**உத்தரவாதம்**

இருப்பினும் தொடர்ந்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்ற இந்திய அரசின் உத்தரவாதத்தின் பிரகாரம்தான் அதனை ஏற்றுக்கொண்டோம்.

தற்போதைய சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இந்திய படை — விடுதலைப் புலிகள் மோதல் காரணமாக அந்த நடவடிக்கைகளைத் தொடர முடியாத நிலை. மோதல் இல்லையேல் நிரந்தர தீர்வுக்கு உரிய பேச்சுவார்த்தைகளை தொடர வைத்து சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்தியிருப்போம்.

ஒப்பந்த மீறல்கள் தொடர்பாக இந்தியத் தூதுவர், இந்திய உயர்மட்டத்திற்கு பல தடவைகள் புகார் செய்துள்ளோம். அது மட்டுமன்றி மீறலைக் கண்டித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெகுஜன போராட்டங்கள் தொடர்கின்றன.

நாம் தேர்தலில் கலந்துகொள்ளும் நோக்குடன் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யவில்லை. எமக்கு இப்போது தேர்தல் முக்கியம் அல்ல. பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுதான் தேவை ஆகும்.

மாகாணசபைதேர்தல் அறிவிப்பு வெளியானதும் எமது வன்மையான கண்டனத்தை இந்திய அரசிடம் தெரிவித்தோம்.

தேர்தல் நடைபெற முன்பு சகல அரசியல்

தேர்தல் இடாப்புத்துச் செய்யப்பட்டு புதியதேர்தல் இடாப்பு தேவை கைதிகளும் விடுதலை, இடம்பெயர்ந்தோர் மீளக் குடியமர்வு 1986 போன்ற கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தோம்.

**கூட்டு இல்லை ஐக்கியம் மட்டுமே**

சென் இலங்கையில் எந்தவொரு இடதுசாரியுடனும் கூட்டு இல்லை. ஆனால் ஐக்கியம் வைத்திருக்கின்றோம்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள பொதுமன்னிப்புத் தெளிவாக இல்லை. இதனை தான் வடக்கு கிழக்குக்கு வெளியே இடம்பெற்ற சம்பவங்களைச் சுட்டிக் காட்டி தமிழ்ப் போராளிகளை ஸ்ரீலங்கா அரசு பழிவாங்குகிறது.

ஈரோஸ்தோழர் ஹரன் கைது செய்யப்பட்டுத் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்நிலை எமது தலைவர் தோழர் கே. பத்மநாபாவிற்கும் ஏற்படலாம். காரணம் அவரைச் சுவிழ்க்கச் சதிசெய்ததாகக் கொழும்பில் 23 பேருக்கு எதிரான வழக்கில் எமது தலைவரும் எதிரிகளில் ஒருவர்.

இதனால் அவர் இலங்கைக்குத் திரும்ப முடியாதநிலை ஏற்படலாம். இதுபற்றி இந்தியத் தூதுவரிடம் சுட்டிக் காட்டியுள்ளோம்.

இப்படி அவர் கூறினார். (இ-21)

# பூஸா அரசியல் கைதிகள் எழுதிய கடிதம்

தமது விடுதலைக்கோரி நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக பூஸா அரசியல் கைதிகள் உதயனுக்கு எழுதிய கடிதம் இது.

கடந்த நான்கு ஆண்டுகளும் மேலாக இலங்கையில் நடைபெற்று வந்த உரிமைப் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் இலங்கை இந்தியத் தலைவர்களால் சென்ற ஜூலை 29 இல் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது அறிந்ததே.

அதன் அடிப்படையில் ஒப்பந்தச் ஷரத்துக்களை அமுல் நடத்தும் வகையில் அரசியல் கைதிகளில் பெரும் பகுதியினர் படிப்படியாக 9-9-87 வரை பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால் அதனைத் தொடர்ந்து துரதிஷ்டவசமாக நாட்டில் தோன்றிய வேண்டத் தகாத நிகழ்ச்சிகளைக் காரணங்களாகக் கொண்டு எஞ்சிய 1250க்கும் மேற்பட்ட கைதிகள் எதுவித முடிவுமின்றி தடுப்பு முகாம்களிலும், சிறைக் கூடங்களிலும் கால வரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் அதே வேளையில் குறிப்பிட்ட சிலரை எழுந்தமானமாக நீதிமன்றில் ஆஜராக்கித் தண்டனை வழங்கப்படுவது கைதிகள் மத்தியில் பெரும் வேதனை அளிப்பதுடன் சமாதான ஒப்பந்தத்தில் சந்தேகத்தையும் வலுப்படுத்துவதாக அமைகின்றது.

அத்துடன் அரசினால் ஒப்புக்கொள்ளப்பட்ட குற்றவாளிகளாகக் கருதப்படுபவர்களின் வழக்குகள் மேலும் பல மாதங்கள் தாமதப்படுத்த படுவது அரசின் திட்டமிட்ட செயலே என ஐயுற வேண்டியிருக்கின்றது.

எனவே எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாயிருக்கும் இவ் வேளையில் எத்தனையோ அமைப்புகள் பொதுநலஸ்தாபனங்கள் எமது விடுதலைக்காக பல நடவடிக்கைகளைப் போராட்ட வடிவிலும் சமாதான முறையிலும் மேற்கொண்டும் இதுவரை அரசின் பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளப்படாமல் இருப்பது வேதனையைத் தரும்.

இக்கால கட்டத்தில் நாங்களே எங்களை வருத்திக் கொள்ளும் ஜீவ மரணப் போராட்டமான உண்ணாவிரதப் போராட்டங்களை பல வடிவங்களில் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தர்ப்பாக்கிய நிலைக்குத் திருப்பந்திக்கப்பட்டுள்ளோம் என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றோம். அதன் அடிப்படையிலேயே பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை இந்தியத் தூதுவர்களுக்கும் சகல கைதிகளின் கையொப்பமிடப்பட்ட அறிக்கையை போராட்ட வடிவங்களின் விபரத்துடன் அனுப்பி வைத்துள்ளோம்.

16-03-88க்கு முன்பாக சாதகமான பதில் எமக்கு கிடைக்காத பட்சத்தில் எமது நியாயமான கோரிக்கை நிறைவேறும் வரை உறுதியுடன் இறுதிவரை போராட்டம் நடத்துவோம் என்பதனை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

இங்ஙனம்

அரசியல் கைதிகள்

பூஸா இராணுவ தடுப்பு முகாம்,

பூஸா.

## புலமைப் பரிசில் பரீட்சை

புங்குடுதீவு மார்ச் 23

5ஆம் ஆண்டு 4 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் உதவிப் பணம் வழங்கவும் பட்டசலை மாணவர்களைத் தேர்ந்தெடுக்கவும் புலமைப் பரிசில் பரீட்சை இவ் வருடம் நடைபெற உள்ளதாக கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-131)

# பதவி பெரிதல்ல; எம். ஜி.ஆரின் ஆட்சி அமைப்பதே லட்சியம்

## நாவலர் நெடுஞ்செழியன் அறிக்கை

— சென்னையில் இருந்து அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி ந. வித்தியாதரன் —

எனக்குப் பதவி பெரிதல்ல; புரட்சித் தலைவர் ஆட்சியை மீண்டும் கொண்டுவருவதே எனது குறிக்கோள்'' இப்படி டாக்டர் நாவலர் கூறினார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

இப்போது எதிர் தரப்பினரும் எதிர்க்கட்சியினரும் எல்லைப்பற்றி இழித்தும் பழித்துப் பேசியும் வருகின்றனர்.

அவற்றையெல்லாம் அறிஞர் அண்ணா கூறியது போல குப்பை என ஒதுக்கி வைத்து எருவாக்கி, வளரும் புரட்சித் தலைவரின் கழகத்திற்கு உரமாக இருக்கிறேன்.

1984 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மூலம் அமைக்கப்பட்ட புரட்சித் தலைவரின் ஆட்சி அரசமைப்புச் சட்டப்படி 1989 இறுதி வரையில் நடைபெற்றுச் செல்ல உரிமை இருந்தது.

ஆனால் எதிர் தரப்பினரின் மோசடிமிகுந்த சதிச் செயல்களினாலும் குராஞ பி எச் பாண்டியன் ஆகியோரின் அடாத அத்துமீறிய சட்டத்துக்குப் புறம்பான முறைகேடான நடவடிக்கைகளாலும் எதிர்தரப்பினரின் அற்ப ஆயுள் கொண்ட கட்சியினரின் அடக்குமுறை செயல்களாலும் புரட்சித் தலைவர் ஆட்சி நீடிக்க முடியாமல் போய்விட்டது.

புரட்சித் தலைவரின் மறைவிற்குப்பின் எதிர் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்ட வேண்டத்தகாத சூழ்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியாலும் எங்களுக்கு சார்பான நல்ல எதிர்க்கட்சியினர் நம் பொதுமக்களும் மேற்கொண்ட முயற்சியாலும் ஒரு அத்தியாயம் வெற்றிகரமாக முடிந்தது.

**சிக்கல்கள் தீர்ந்தன**

புரட்சித்தலைவர் மறைவையொட்டி எனக்கு ஏற்பட்ட பொறுப்பின் காரணமாக சில ஜனநாயக நெறிமுறைகளை நிலைநாட்ட வேண்டிய கட்டுப்பாடு எனக்கு ஏற்பட்டது.

அந்த சிக்கல்கள் இல்லாத கட்டுப்பாடு தான் இப்பொழுது அந்த நிலையையும் மாற்றிவிட்டது.

சிக்கல்கள் தீர்ந்துவிட்டன. புதிய அத்தியாயத்தை உருவாக்க வேண்டிய பெருங்கடப்பாட்டிற்கு புரட்சித் தலைவரின் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் அனைவரும் வந்திருக்கிறோம்.

இனி தேர்தல்களத்தை புரட்சித்தலைவர் வகுத்த முறைப்படி அணுகி கடமையாற்றவேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ-உ)

## தமிழகத்திலிருந்து

# கலைவிழாக்களை நடத்திய நாம் அஞ்சலிக் கூட்டம் நடத்துகிறோம்

## மேரி பஸ்ரியன் நினைவு தினத்தில் வித்தி

காங்கேசன்துறை, மார்ச் 23

கலை, கலாச்சார பெருவிழாக்களை நடத்தி மகிழ்ச்சி கொண்டாடிய நாம் இன்று அஞ்சலிக் கூட்டங்களையும், நினைவு தினக் கூட்டங்களையும் நடத்தும் நிலையில் இருக்கின்றோம். கடந்த பல ஆண்டுகளாக தமிழினம் இப்படியான அவல நிலையிலேயே இருந்து வருகிறது. இந்நிலைக்கு முடிவு வராதா? என்றே தமிழ் மக்கள் ஏங்கித் தவிக்கிறார்கள்.

இப்படி கூறுகிறார் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர். கலாநிதி சு. வித்தியானந்தன்.

அருட்திரு மேரி பஸ்ரியன் அடிகளாரின் மூன்றாண்டு நினைவு தினத்தையொட்டி வெளியிடப்பட்டுள்ள ''தீபங்கள் எரிகின்றன'' என்னும் நூலின் அறிமுக விழா தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில்நடைபெற்றது.

அதற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே கலாநிதி வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னாட்டுக்கூத்து ஆய்வு சம்பந்தமாக வங்காலைக் கிராமத்துடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது.

அப்பகுதி மக்களின் இனப்பற்று கலைப்பற்று போற்றுதற்குரியவை அங்கு குருவாக இருந்து பெரும்பணியாற்றிய அருட்திரு மேரி பஸ்ரியன் நீதிக்காக குரல் கொடுத்து வீரமரணத்தை எதிர்கொண்டமை தமிழ் மக்கள் மனதில் பெரும் கவலையை தோற்று வித்தது

(5 ஆம்- பக்கம் பார்க்க


பிரயாண ஒழுங்குகள்

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!

குறைந்த கட்டணத்தில் மனம் நிறைந்த பிரயாணம

சவூதி அரேபியா:

எயர்ப்போட் கிளீனர்ஸ்

100 பேர் தேவை. சம்பளம் 350 + 100

கட்டுப்பணம் 8000/-

(ஒப்பந்தம் 5 மாதங்கள்)

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய குறிப்பு :- முற்பணம் அறவிடப்படமாட்டாது, செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை மணி 8-30 முதல் மாலை 4-30 மணிவரை நிலையம் திறந்திருக்கும்.

ஏமாற்றத்தைத் தவிர்த்து நம்பிக்கையுடன் குறித்த தவணையில் பிரயாணம் செய்ய இன்றே தொடர்பு கொள்ளவும் சுன்னாகம் கோல்டன் ரவல்ஸ் & ருர்ஸுடன்

தொடர்பு:-

கோல்டன் ரவல்ஸ் & ருர்ஸ்

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்



ஹோம் பிஞன்ஸ் லிமிடெட்

155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

வைப்பாளர்களுக்கான முக்கிய அறிவித்தல்

ஹோம் பிஞன்ஸ் லிமிடெட் தற்போது ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எமது வழமையான அலுவல்கள் 01-06-88 முதல் செயல்படுவதற்கு சகல வைப்பாளர்களுக்கும் பங்கு வழங்கும் இறுதித் திகதி 30-04-88 என்பதையும், நிரந்தர இயக்குனர் சபை ஒன்றினை தேர்ந்தெடுப்பதற்கான பங்குதாரர் கலந்து கொள்ளும் விசேட பொதுக்கூட்டம் 21-05-88 இல் நடைபெறும் என்பதனையும் அறியத் தருகின்றோம். இது சம்பந்தமான சுற்றறிக்கை எம்மால் சகல வைப்பாளர்கட்கும் அனுப்பப்பட்டு வருகின்றது. மேலதிக விபரங்களை எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்

ச. வைத்தீஸ்வரன்

யாழ்ப்பாணம்.



பிரயாண ஒழுங்குகள்

Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1. | AUTO இயந்திர வல்லுநர் | — | 750 SR |
| 2. | கனரக வாகன சாரதிகள் | — | 650 SR |
| 3. | LUBE தொழில் நிபுணர் | — | 750 SR |
| 4 | கனரக சாதன இயந்திர வல்லுநர் | — | 750 SR |
| 5 | மோட்டார் REWIND நிபுணர் | — | 750 SR |
| 6 | AUTO A/C தொழில் நிபுணர் | — | 850 SR |
| 7. | தச்ச வேலைக்காரர் | — | 700 SR |
| 8 | AUTO மின்சார தொழிலாளி | — | 700 SR |
| 9 | Wheel Balance and Align Specialist | — | 800 SR |
| 10 | வர்ணம் தீட்டுவோர் | — | 650 SR |
| 11. | கட்டு, முட்டு, மெத்தை உறை போன்ற சாதனங்கள் அளிப்பவரின் தொழிலாளி | — | 800 SR |
| 12. | சுருதியை அதிகரிக்கச் செய்யும் நிபுணர் | — | 800 SR |
| 13. | கொமாஸ்தா | — | 650 SR |
| 14. | Plumber (காரியத்தினால் குழாய்கள், தொட்டிகள் சீர் செய்வர்) | — | 650 SR |
| 15. | Welders | — | 650 SR |
| 16 | கடைச்சல் இயந்திர தொழில் நிபுணர் | — | 700 SR |
| 17. | தச்சு வேலைக்காரர் (Carpenters) | — | 650 SR |
| 18. | மேசன் (Masons) | — | 650 SR |
| 19. | இயந்திர பொறியியலாளர் | — | 2200 SR |
| 20. | மின்னியலாளர் | — | 2500 SR |
| 21. | மின் படவரைஞர் (Electrical Draughtsman) | — | 1500 SR |
| 22 | Electrician (மின்சார தொழிலாளி) | — | 700 SR |
| 23 | குளிரூட்டியியல் தொழில் நிபுணர் | — | 800 SR |
| 24 | Secretary / Typist | — | 800 SR |
| 25. | Telex Operator | — | 800 SR |
| 26 | தோட்டக்காரர் Gardeners | — | 350 SR |
| 27 | துப்பரவாக்கிகள் | — | 350 SR |

முக்கியகுறிப்பு:-

இவர்கள் யாவரும் 3-4-88 இல் எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை செய்ப சமுகம் அளிக்க வேண்டும். அதன்பின் ஒரு வாரத்தில் பயணம் செய்யலாம். இதற்குத் தேவையானவை பின்வருவன:-

வயதெல்லை 21 - 50 வரை

1. Passport படவுச் சீட்டு
2. மூன்று (3) பாஸ்போட் சைஸ் படம்
3. வேலைசெய்த தொழில்சான்றிதழ்

இவையாவும் கொண்டு உடன் தொடர்பு கொள்ளவும்.

2. Kuwait Cleaners 30 KD

Age 18 — 48 வரை

மற்றும் Kuwait, Singapore, Abudhabi ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு பணிப்பெண்கள் (House Maid) தேவை

போக விரும்புவோர் உடன் 1 முழு அளவு படம், 3 பாஸ்போட் சைஸ் படத்துடன் தொடர்பு கொள்ளவும். போக விரும்பும் யாவரும் எமது காரியாலயத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

T. V. TRAVELS

BROWN ROAD :: KOKUVIL.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம், காங்கேசன்துறை, சாவகச்சேரி ஆகிய

# மேலும் மூன்று மக்கள் வங்கிக் கிளைகளில் பணப்புழக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

சுன்னாகம், காங்கேசன்துறை, சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளைகளில் புதிதாக பணப்புழக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி நெல்லியடி ஆகிய மூன்று கிளைகளில் மட்டுமே தற்பொழுது பணப்புழக்கம் நடைபெற்று வருகிறது.

மூன்று கிளைகளிலேயே பணப்புழக்கம் இருப்பதனால் வாடிக்கையாளர் பெரும் அவஸ்தைப்படவேண்டிய நிலை உள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டே பணப் புழக்கம் மேலும் மூன்று கிளைகளுக்கு விஸ்தரிக்கப்படுகிறது.

இவ்வாறு மக்கள் வங்கியின் பிரத்தியேக முகாமையாளர் திரு. எம். கணேசசுந்தரம் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் மேற்படி மூன்று கிளைகளிலும் பணப்புழக்கம் ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்றும் திரு கணேசசுந்தரம் தெரிவித்தார். (ஓ-க)

## அ,புரம் - தலைமன்னார் ரயில் இப்போதைக்கு இல்லை

கொழும்பு, மார்ச் 23

அனுராதபுரம் — தலைமன்னார் ரயில் சேவை தற்போதைக்கு ஆரம்பிக்கப்படமாட்டாது.

ரயில்வே திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

மதவாச்சிக்கும் தலைமன்னாருக்கும் இடையேயான தாவல் தொடர்பு சாதனங்கள் சேதமடைந்து உள்ளன. உயர் சக்தி கொண்ட வானொலித் தொடர்புதான் தற்சமயம் அனுராதபுரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையே உண்டு. (ஓ எ)

## விரிவுரையாளர் ஆட்கொணர்வு மனுவை விசாரிக்க உத்தரவு

கொழும்பு, மார்ச் 23

கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போனதாகக் கூறப்படும் விரிவுரையாளர் சத்தியபால வன்னிகம சம்பந்தமான ஆட்கொணர்வு மனு பற்றி விசாரிக்கும்படி கொழும்பு பிரதம நீதிவான் பணிக்கப்பட்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைக் கடந்த வெள்ளிக்கிழமை பிறப்பித்தது.

விரிவுரையாளர் வன்னிகமவின் உறவினரான நிர்மலா வன்னிகம தாக்கல்செய்த ஆட்கொணர்வு மனு மேன்முறையீட்டு நீதியரசர்கள் தீரரத்தின பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

13-11-1987 பிற்பகல் ஒரு பணியளவில் விரிவுரையாளரை, பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்தன சலபதி கைதுசெய்தார். அதன் பின்னர் அவர் பற்றித் தகவல் எதுவும் தெரியவில்லை. சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வன்னிகமவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்— இப்படி ஆட்கொணர்வு மனுவில மேன்கூறப்பட்டுள்ளது. (அ-எ)

### தேவை

டுபாயில் ரெயிலர் வேலைக்கு உடனடியாக 18 — 38 வயதுக்குள் உள்ளவர்களும், மாலைதீவுக்கு மாபிள் மேசன் வேலைக்கு அனுபவம் உள்ளவர்களும், குவைத் Hospital Cleaners பெண்களும், அபுதாபி, பாரின், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு வீட்டு வேலைக்குப் பணிப் பெண்களும் உடன் தேவை.

தொடர்பு:- க. சிவசுப்பிரமணியம்,
91/16 இந்துமகளிர் லேன்,
கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.
(2117)

# S. P. ANTON

வழங்கும்

## உடனடிப் பயண ஒழுங்குகள்

**i. சவூதி அரேபியா:**

Supervisors, Tally clerks, Drivers, Secretaries, Librarian, Painter, Carpenter, Mason, Computer operator, Cashier, Store keeper, Mechanics, Electrician, Firemen, Security, Guards, Typists மற்றும் தொழிலாளர்கள், கிளீனர்கள், வீட்டு வேலையாட்கள் முதலிய வேலைவாய்ப்புகள் உண்டு.

**ii. அபுதாபி:**

**House Boys, cleaners House maids உடனடியாகத் தேவை.**

**iii. HOUSE MEIDS:**

சிங்கப்பூர், கிறீஸ் முதலிய நாடுகளுக்கு ஆங்கில அறிவுடைய House maids உடனே தேவை.

சம்பளம் ரூ 3,500/- — 6,500/- வரை.

**iv. கப்பல் வேலைவாய்ப்புகள்:**

'Nomikos' மற்றும் தரமான கிரேக்கக் கப்பல்களில்.

OFFICER VACANCIES உடன், A/B Deck Boy, Mess Boy, Wiper முதலிய வெற்றிடங்கள் உண்டு. நம்பிக்கையுடன் பயணம் ஒழுங்குபண்ணித் தரப்படும்.

**v. கனடா பயண ஒழுங்குகள்:**

நம்பிக்கையான முகவர் மூலம், சிங்கப்பூரில் இருந்து சிறு குழுக்களாக கனடா பயணம் செய்வதற்கு நிச்சயமான ஒழுங்குகள் செய்து தரப்படும்.

**மற்றும் சகல விவரங்களுக்கும் உடனே நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.**

S. P. அன்ரன்
வேல் ரேடர்ஸ், (மக்கள் வங்கி முன்பாக)
ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

கொழும்பு முகவரி:

**S. P. Anton**
No: 273 Wolfendhal Street,
COLOMBO 13.
AL 137/1/88

### 148 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்
### சின்னையா அம்பிகைபாலன் அவர்கள்

அன்னையின் மடியில்:- 25-04-1960



அரக்கரின் அழிப்பில்:- 27-10-1987

''கோழையாய்க் குனிந்து சோம்பிக்
குறுகிடும் பிறவி யாக
ஏழைநீ வாழ்ந்த தில்லை
இரும்பதன் உறுதி யோடு
காளையா யிருந்த நீயே
கயவரால் மடிந்த துன்ப
நாளையே நினைந்து கண்ணீர்
அஞ்சலி செலுத்து வோமே''.

23-03-88 புதன் கிழமை நடைபெற இருக்கும் அன்னாருக்கான அந்தியேட்டிக் கிரிகைகளில் அனைவரையும் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைப்பது -

பெற்றோர், — சகோதரர், மனைவி, மகள்.

மறவன் புலோ,
சாவகச்சேரி வடக்கு
(2075)

### 3 ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



தோற்றம்: 26 01 - 1921 மறைவு: 23 03 - 1985

**அமரர் மா. மகாதேவன்**
இளைப்பாறிய அதிபர்
யா/ மகாஜன கல்லூரி - தெல்லிப்பளை
யா/ கொக்குவில்இந்துக்கல்லூரி - கொக்குவில்

கல்வியாற் சிறந்தீர் என்றே
கற்றவர் போற்ற வாழ்ந்தீர்
சொல்லறம் அன்பினாலே
சுற்றத்தோர் மதிக்க வாழ்ந்தீர்
நல்லவை அனைத்துஞ் செய்தீர்
கண்ணெனக் காத்தீர் எம்மை
அல்லல் நாம் எய்தச் சென்றீர்
அவனியில் மறப்போமோ நாம்.

மனைவி, மக்கள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்
(2111)

## புகைக்கும் வாகனங்கள்

கொழும்பு, மார்ச் 22

புகை கக்கும் வாகனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி மத்திய சுற்றுப்புறச் சூழல் அதிகாரசபை அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

இவ்வாகனங்கள் காற்றை அசுத்தமாக்குகின்றன என்றும் அதிகாரசபை தெரிவித்திருக்கின்றது. (இ-எ)

## மூன்று ராணுவ வீரர் மூவர் கைது

கொழும்பு, மார்ச் 23

விஜேகுமாரணதுங்காவின் கொலை தொடர்பாக இராணுவத்தை விட்டு வெளியேறிய மூன்றுபேர் இரகசியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இத்தகவலைப் பொலிஸ் வட்டாரங்கள் வெளியிட்டன. (ஓ எ)

## நியமனம்

பூனகரி, மார்ச் 23

பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கணக்காளர் திரு சி. சிவபால சுப்பிரமணியம் கரைச்சி தெற்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

இவரது சேவையைக் கௌரவிக்கு முகமாக அண்மையில் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. தி. இராசநாயகம் தலைமையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது. (இ)

## தேர்தல்களை ஒத்திவைக்கும் நிலை ஏற்பட்டால்...

கொழும்பு மார்ச்23

பொதுத் தேர்தல் ஜனாதிபதித்தேர்தல் ஆகியன சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின்மூலம் ஒத்திவைக்கப்படும் நிலை ஒன்று ஏற்படில் பிலிப்பீன்ஸ் பாணியில் வெகுசன இயக்கம் ஒன்றை நடத்த சுதந்திரக்கட்சி தீர்மானித்து இருக்கின்றது.

இதுசம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட எல்லா அரசியல் கட்சிகளும் கலந்துகொள்ளக்கூடிய மாநாடு ஒன்றை நடத்துவது குறித்து சுதந்திரக் கட்சி தீவிர பரிசிலனையை மேற்கொண்டுள்ளது. (ஓ எ)

## வல்லை வீதி திருத்தப்படுகிறது

அச்சுவேலி, மார்ச் 23

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் அச்சுவேலி வல்லை வீதி திருத்தப்படுகிறது. (இ-11)

## அக்கராயனில் கொல்லப்பட்டோர்

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சியிலுள்ள அக்கராயன் பகுதியில் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றமோதலின்போது மரணமான இருவரின் விவரம் வருமாறு:-

பி. அந்தோனி (வயது 25) திரு.மணியம் (வயது 40).

வேறு நால்வர் இச்சம்பவத்தின்போது காயமடைந்தனர்.

கடந்த 16ஆம் திகதி வாழைக்குலை ஏற்றிச் சென்ற லொறியில் அக்கராயன் பகுதிக்கு சென்ற இராணுவத்தினரே அங்கு தாக்குதலை மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தின்போது ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டு டிராக்ரர்கள் இதனால் சேதமடைந்தன என்றும் அறிய வருகிறது.

இது சம்பந்தமான செய்தி ஒன்று ஏற்கனவே உதயனில் பிரசுரமானது தெரிந்ததே. (ஓ-76)

## ஞாபகார்த்தச் செயற்குழு

காலஞ்சென்ற நாடகக் கலைஞர் வீ. எம். குகராஜாவின் ஓராண்டு நினைவாஞ்சலியை எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் கொண்டாடும் வகையிலும் அன்னாரது குடும்பத்திற்கு நிதிஉதவி வழங்கும் வகையிலும் நடிகமணி வி. வி. வைரமுத்து தலைமையில் ஒரு ஞாபகார்த்த செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் பொருளாளராக சி. பேரின்பநாயகமும், இணைச்செயலாளராக எஸ் ஜெபக்குமார், எஸ். பதவராஜா ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக குழந்தை சண்முகலிங்கம், எம். கண்ணன், பிரான்சிஸ் ஜெனம் ஏ. ரி. பொன்னுத்துரை, மு. திருநாவுக்கரசு, சி. குமாரவேல், ஆர். இராஜேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ)


# பிரயாண ஒழுங்குகள்

**KUWAIT (குவைத்)**

1. 60 தொழிலாளர்
2. 10 முஸ்லீம் தொழிலாளர் (விவசாயப்பண்ணை) (உணவுடன் தங்கும் வசதி உண்டு)
3. 70 போக்லிப் இயக்குனர்
4. 100 தறைமுகத் தொழிலாளர் [மேலதிக ஊதியம் உணவுடன் தங்கும்வசதி உண்டு. 3 வருட ஒப்பந்தம்

**சவூதி அரேபியா**

1. 100 தொழிலாளர் சொமட் வைத்தியசாலை வயது 21—40 [கடவுச்சீட்டு 6 புகைப்படங்களுடன் தொடர்பு கொள்ளவும்]

**அபுதாபி**

1. 100 பெண் தையல் தொழிலாளி [Jukki மெசின்] (26-3-88இல் நேர்முகப்பரீட்சை கொழும்பில்நடைபெறும்)

**சிங்கப்பூர்**

1. பணிப்பெண்கள் [வயது 18 முதல் 40 வரை]

★ முற்பணம் அறவிடப்படமாட்டாது. சகல ஒழுங்குகளும் செய்தபின்பு செலவுத் தொகையைப் பெற்றுக் கொள்வோம்

# V. T. R. TRAVELS

83/10 Beach Road, JAFFNA

அமரர் மாண்புமிகு தமிழக முதல்வர், அமரர் அறிஞர் அண்ணா பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி ஆர் ஆகியோரின் சிலை வின் முன்பாக உள்ள ஒழுங்கையில் உள்ளது

திரு. வேல்முருகு தங்கராசா, திரு. வேல்முருகு மகேஸ்வரன் (மகேஸ்) சகோதரர்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய மறு விலாச :

திரு. M. N. தெய்வேந்திரம் திரு E. கிருஷ்ணமாஸ்ட்டர்
மாரியம்மன் லேன், திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்
எஸ் மகேந்திரராஜா
ஹரி ஓம் ரேடர்ஸ், 208, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மிகவிரைவில் எமது காரியாலயம் யாழ்நகர் மத்தியில் திறந்துவைக்கப்படும் [2656]


# சந்நிதியான் ஆச்சிரம அன்னதானத் தொண்டு பற்றிய அறிவித்தல்

உயர் திரு முத்துக்குமாரு மயில்வாகன சுவாமி அவர்களால் சிறப்புற நடாத்தப் பெற்று வந்த ஆனந்தாச்சிரமத்தினை திரு சுவாமி அவர்கள் சமாதி அடைந்த பின்பு அவருடன் சிறு பிராயம் தொட்டு சேவையாற்றி வந்த செ சந்திவேல் மோகனதாஸ் (மோகன்) ஆகிய நான் அன்னாரின் புகழ் மங்கா வண்ணம் அவரின் நடைமுறைப்படி சிறப்புற நடத்தி வந்தேன். கடந்த ஒரு வருட காலத்திற்குள் இராணுவ நடவடிக்கை காரணமாக ஆனந்தாச்சிரமத்தின் அன்னதான கைங்கரியம் தடைப்பட்டு நானும் மற்றும் பல தொண்டர்களும் அவ்விடத்தைவிட்டு இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது

மீண்டும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சுமுகமான சூழ்நிலையில் நான் தொடர்ந்தும் அத்தரும கைங்கரியத்தை தொடர எண்ணி ஆனந்தாச்ச்சிரமத்திற்கு சென்ற பொழுது திரு சுவாமி அவர்களின் உறவினர்கள் என்று கூறிக்கொள்ளும் ஒரு சிலர் அங்கே இடைப்புகுந்ததனால் நான் அவ்விடத்தில் அத் தரும கைங்கரியத்தை தொடர்ந்தும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதன் காரணமாக தற்பொழுது செல்வச்சந்நிதி ஆலய முன்புறமாக அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் மேற்படி அத்தொண்டினை தொடர்ந்தும் நடத்தி வருகின்றேன். என்பதை திரு சுவாமி அவர்களின் உயரிய நோக்கை உணர்ந்து இது வரை காலமும் ஒத்தாசை வழங்கிய ஆதரவாளர்கள், அனுதாபிகள், தர்மவான்கள், நன்கொடையாளர்கள், அடியார்கள் யாபேருக்கும் மிகவும் தாழ்மையுடன் இத்தால்தெரிவித்துக்கொள்கின்றேன்.

உறவு என்றும், உரிமை என்றும், நிர்வாகி என்றும், ஆச்சிரமகர்த்தா எனறும், கூறிக்கொள்பவர்கள் சிலரால் திரு சுவாமி அவர்களின் புனிதமான தொண்டு ஸ்தம்பிக்கக் கூடாது என்பதற்காகவும், இப்புனிதமான அன்னதானத் தொண்டினை நீயே தொடர்ந்து செய் என்று திரு சுவாமி எனக்கு இட்ட கட்டளை காரணமாகவுமே சன்னதியான் ஆச்சிரமம் உருவானது என்றும் அவரால் தொடக்கப் பெற்ற அன்னதான கைங்கரியத்தினை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நான் தொடர்ந்தும் செவ்வனே செய்து வருவேன் என்றும் இத்தால் சகலருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றேன்.

இவ்வண்ணம்

**திரு. மு. மயில்வாகன சுவாமி**
அவர்களுக்காக
**செ. மோகனதாஸ்**
(மோகன்)

சந்நிதியான் ஆச்சிரமம்
(அரசம்மா மடம்)
செல்வச்சந்நிதி, தொண்டமானாறு
[2116]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

சத்தியம் மேலானது. அதைவிட மேலானது சத்தியமாக நடப்பது — குருநானக்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805 22073
யாழ்ப்பாணம்.
23.03.1988 உ.செ.இல: 23


## இறுக்குதல்வேண்டாம்

பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்காக ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற அளிக்கப்படும் அவகாசம் மூன்று தடவைகளிலிருந்து இரண்டாகக் குறைக்கப்பட உள்ளது.

கடந்த பல வருடங்களாக அமுலில் இருந்த முறையை 1990 ஆம் ஆண்டு தொடக்கம் மாற்றுவதற்குப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முடிவு செய்திருக்கிறது.

இந்தப் புதிய ஏற்பாடு, நிச்சயமாக, பல்கலைக்கழக அனுமதியில் உள்ள நெருக்கடியை, கஷ்டத்தைக் குறைப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள ஒருதிட்டம் எனக் கொள்ளலாம்.

சுமார் இருபது இருபது வருடங்களுக்கு முன்னர், ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்துவதுதான் இடைநிலைக் கல்வியின் பொதுவான தராதரமாக இருந்தது.

ஆனால் இப்போது எல்லோருமே ஜி.சி.ஈ. உயர்தரம் வரை பயில்வதும், பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற முயற்சிப்பதும் பொதுவாகி விட்டது; சாதாரணமாகியும் விட்டது.

அதனால் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெறும் மாணவர் எண்ணிக்கையும் வருடாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளது. தகுதி பெறுவதற்கான ஆகக் குறைந்த புள்ளி வரையறை வருடாந்தம் உயர்த்தப்பட்ட போதிலும், அனுமதிக்குத் தகுதி பெறும் மாணவர் எண்ணிக்கையும் உயர்ந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாகச் சொல்வதானால், பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்குத் தகுதி பெறும் மாணவர்களில் நான்கில் ஒரு பங்கினருக்குக் கூட, உயர்கல்வி வாய்ப்பளிக்க முடியாத நிலையில் பல்கலைக்கழகங்களில் பல விதமான வசதிக் குறைவுகளும் நிலவுகின்றன.

அவற்றைக் கருத்திற்கொண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான விதிமுறைகளை இறுக்கி தகுதி பெறுவோர் எண்ணிக்கையை குறைக்க மானிய ஆணை குழு நினைக்கிறது. அது ஒவ்வாத காரியம்.

இது நாட்டின் உயர்கல்வித் துறைக்கு மட்டுமன்றி, அதன் பொதுவான முன்னேற்றத்துக்கும், குறிப்பாகக் கல்வி வளர்ச்சிக்கும் குந்தகமானதாகும். மாணவருக்குக் கிடைக்க வேண்டிய உயர்கல்வி வசதியை வேண்டுமென்றே தட்டிப் பறிக்கும் செயலுமாகும். அடிப்படை மனித உரிமைகளுக்கு, மாணவரின் கல்வி உரிமைகளுக்கு விரோதமானது என்றும் கூறலாம்.

நாடு வளர்ச்சி காண வேண்டுமெனில், வளம் அடைய வேண்டுமெனில் மக்களின் கல்வித்தரம் உயர வேண்டும். வெறும் ஏட்டுக் கல்வியும், இடைநிலைக் கல்வியும் மட்டுமன்றி தொழில் முறை சார்ந்த கல்வியும், உயர் கல்வியும் விருத்தி பெற வேண்டும்.

உயர்கல்வி பெறுவதற்குத் தகுதி பெறுவோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்பதற்காக அதற்குத் தடை போட நினைக்கக் கூடாது. உயர்கல்வியைத் தொழில் சார்ந்த கல்வியாக்கி, தகுதியுள்ள ஒவ்வொருவருக்கும் அவர் பெற விரும்பும் துறையில் பயிற்சி அளிக்க வகை செய்யப்படுதல் அவசியம். உயர் கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். காலத்தின், சமூகத்தின் தேவைக்கு ஏற்ப போதனா நெறிமுறைகளில் மாற்றம் செய்ய வேண்டும். மொத்தத்தில் நாட்டின் கல்வித் திட்டம் மறு பரிசீலனை செய்யப்பட்டு மீளமைக்கப்பட வேண்டும்.

# தனது அணி தனித்துப் போட்டியிடும் என காங்கிரசை மிரட்டுகிறார் ஜெயலலிதா

சென்னை, மார்ச் 22

மறைந்த முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் வகுத்த தொகுதி உடன்பாட்டுக்கு இணங்க சட்டசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் போட்டியிட வேண்டும். இல்லையேல் எனது தலைமையிலான அ.தி.மு.க. அணி தனித்துப் போட்டியிடும்.

இப்படி செல்வி ஜெயலலிதா கடந்த திங்கட்கிழமை இந்திரா காங்கிரசை மிரட்டினார்.

செய்தியாளர் மத்தியில் பேசிய போது செல்வி ஜெயலலிதா மேலும் சொன்னதாவது:

சட்டசபைத்தேர்தலில் அ.தி.மு.க. மூன்றில் இரண்டு பங்கு தொகுதிகளிலும் எஞ்சிய தொகுதிகளில் இந்திரா காங்கிரஸும்—

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மூன்றில் இரண்டு பங்கு தொகுதிகளிலும் எஞ்சிய தொகுதிகளில் அ.தி.மு.க.வும் போட்டியிட வேண்டும் என்பது தான் எம்.ஜி.ஆர். வகுத்த முறை.

இதற்கு இந்திரா காங்கிரஸ் உடன்படா விட்டால், அ.தி.மு.க. (ஜெயலலிதா அணி) சட்டசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும்—

இப்படி செல்வி ஜெயலலிதா சொன்னார். (ஒ-எ)

## உண்மை ஒருநாள் வெளியாகும்!

### முன்னாள் ஜனாதிபதி ஷெயில்சிங் கூறுகின்றார்

பம்பாய், மார்ச் 22

உண்மை ஒருநாள் வெளியாகும். எனக்கு 30 முதல் 40 கோடி ரூபா தந்து இரண்டாம் முறையாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும்படி கேட்டுக் கொண்டவர்களின் பெயர்களை அறிந்து நீங்கள் அப்போது ஆச்சரியப்படுவீர்கள்.

முன்னாள் ஜனாதிபதி திரு. ஷெயில்சிங் முன் கண்டவாறு சொன்னார்.

பம்பாய் வார சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் திரு ஷெயில்சிங் இதனைத் தெரிவித்தார். திரு. ஷெயில்சிங் மேலும் சொன்னதாவது

இரண்டாம் முறை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும்படி கேட்டுக் கொண்டவர்களில் பிரச்சினைக்குரிய சுவாமி ஒருவரும் இருக்கின்றார்.

யாரோ சுல்தானைத் தனக்கு நன்முகத் தெரியும் என்று இந்தச் சுவாமி சொன்னார். தன்னிடம் நிறையப் பணம் இருப்பதாகவும் அவர் கூறினர்.

இதற்குப் பிரதியுபகாரமாக குறிப்பிட்ட அமைச்சர் ஒருவரை பிரதமராக நியமிக்கும்படியும் அச்சுவாமி என்னைக் கேட்டுக் கொண்டார்.

எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த எவரும், காங்கிரஸில் உள்ள அதிருப்தியாளர்களும் இரண்டாம் முறை போட்டியிட பணம் தருவதாகக் கூறவில்லை.

சிலர் 'தூது' அனுப்பினர். பிரதமர் பதவிக்குத் தங்களை நியமிக்கும்படி. ஒருஇளம் எம்.பி என்னிடம் வந்தார். 100 எம்.பிக்களின் பட்டியல் ஒன்றைத் தருவதாகவும் சொன்னார். நான் நியமிக்கப்போகும் பிரதமரை அந்த எம்.பிக்கள் ஆதரிப்பார் என்றும் சொன்னார். ஆனால் ஒரு நிபந்தனை விதித்தார். புதிய அமைச்சரவையில் தன்னையும் ஓர் அமைச்சராக நியமிக்க வழி செய்ய வேண்டும் என்பதே அவர் நிபந்தனை. இப்படி திரு ஷெயில்சிங் தெரிவித்தார். (எ)

## அமெரிக்க யோசனை தற்கொலைக்கொப்பானது!

### றேகனைச் சந்தித்தபின் இஸ்ரவேல் பிரதமர் கூற்று

லொஸ்ஏஞ்சல்ஸ், மார்ச் 22

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அமெரிக்க அரசு சமர்ப்பித்துள்ள புதியயோசனை தற்கொலைக்கு ஒப்பானது.

இஸ்ரவேல் பிரதமர் ஷமிர் முன்கண்டவாறு சொன்னார்.

அதிபர் றேகன், வெளியுறவு அமைச்சர் ஷுல்ட்ஸ் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்திவிட்டு திரும்பும் வழியில் லொஸ்ஏஞ்சல்ஸுக்கு அவர் சென்றார்.

புதிய யோசனையை ஏற்றுக்கொண்டால் 1967 யுத்தத்துக்கு முன்னர் இருந்த நிலைக்கு நாம் சென்றுவிடுவோம். இது தற்கொலைக்கு ஒப்பானது.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச மாநாடு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை, நேரடிப் பேச்சு நடத்தும் திட்டத்தைத் திசை திருப்ப சோவியத், அரபு நாடுகள் மேற்கொள்ளும் முயற்சி—

இப்படி பிரதமர் ஷாமிர் மேலும் சொன்னார். (எ)

## தி.மு.க. ஆட்சியைப் பிடிக்கும்

சென்னை, மார்ச் 23

தமிழ் நாட்டின் ஆட்சியை தி.மு.க. கைப்பற்றும்.

திரைப்பட டைரக்டர் டி. ராஜேந்தர் இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தி.மு.க. ஆட்சிக்கு வரும் என்பதில் சந்தேகமே இல்லை. தி.மு.க.வுக்கு ஆதரவாக தீவிர தேர்தல் பிரசாரம் செய்வேன்.

சிவாஜி கணேசன் தன்மானம் உள்ளவர் தனிக் கட்சியை அவர் தொடங்கியதில் எவ்வித தவறும் இல்லை.

இப்படி திரு. ராஜேந்தர் சொன்னார். (எ-உ)

**வெளி உலகில்**

## நிக்கரகுவா அரசு கொன்ரு கிளர்ச்சியாளர் சமரசப் பேச்சு ஆரம்பம்

நிக்கரகுவா அரசுக்கும் கொன்ரு கிளர்ச்சிக்காரர்களும் இராணுவ மோதலை இடைநிறுத்தி வைத்து விட்டு சமரசப் பேச்சுக்களைக் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்தனர்.

பேச்சுக்களில் முதல் கட்ட முடிவில், இருதரப்பினரும் திருப்தி தெரிவித்தனர்.

நிரந்தரயுத்தநிறுத்தம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உருவாகி இருப்பதாக இரு தரப்பு வட்டாரங்களும் தெரிவித்தன.

நிக்கரகுவா அரசுக் குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சர் ஒட்டேகா தலைமை வகிக்கின்றார்.

கொன்ருக் குழுவுக்கு அதன் தலைவர்பெலாரோ தலைமைவகிக்கின்றார்.

உயர் மட்டத்தலைவர்கள் சமரசப்பேச்சுக்களில் கலந்து கொள்வது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

நிக்கரகுவா பட்டினம் ஒன்றில் இப்பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றது.

கடந்தவாரம்கொன்ரு கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை முற்றுப்பெற்று விட்டதாக நிக்கரகுவா அறிவித்ததைத் தொடர்ந்து இப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஹொண்டுராஸில் நிக்கரகுவாப்படைகள்! ஊடுருவல் செய்ய முயல்வதாக கூறி அமெரிக்கா தனது படையை ஹொண்டுராஸுக்கு அனுப்பியதும் அதனால் பதற்றம் ஏற்பட்டதும் தெரிந்ததே. (எ)

## இமயமலை ஏறும் முயற்சியில் 3 நாடுகள்

இமயமலைத் தொடரில் உள்ள சகர்மாதா சிகரத்தை ஏறும் முயற்சியில் சீன, ஜப்பான், நேபாள நாடுகளின் கூட்டுக்குழு ஒன்று ஈடுபட்டிருக்கிறது.

சென்ற 10 திகதிவரை இம்மலையேறும் கோஷ்டி 5, 154 மீட்டர் தூரத்தை எட்டியிருக்கின்றது.

மலைத் தொடரின் வட பகுதியில் இருந்து இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது (எ)

# கிழக்கில் மீண்டும் ஸ்ரீலங்காப் படைகளை அனுமதிப்பதை மீள்பரிசீலனை செய்க

## ஈரோஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

கிழக்கில் ஸ்ரீலங்காப் படைகள் மீண்டும் இயங்குவதற்கு அனுமதி அளிக்கும் முடிவு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும்.

ஈரோஸ் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை விவரம் வருமாறு:-

**மீண்டும் ஸ்ரீலங்கா படைகள்**

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஸ்ரீலங்கா அரசின் படைகளை இயங்க அனுமதித்திருப்பதாக வெளியாகியுள்ள செய்தி குறித்து எமது அதிர்ச்சியைத் தெரிவிக்கிறோம்.

ஜூலை ஒப்பந்தத்தின் பின்னரும் ஸ்ரீலங்கா அரச படையும் விசேட அதிரடிப்படையும் ஒப்பந்தத்திற்கு முரணாக முகாம்களை விட்டு வெளியே வந்து போராளிகளையும் மக்களையும் கொன்று; கைது செய்து; கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவித்தனர் என்பது கண்கூடு.

அதே சமயத்தில் இரகசியமான முறையில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியது; 'ஜிகாத்' போன்ற தீவிர பௌத்த வாதக் குழுக்களை உருவாக்கி ஆயுதங்களை வழங்கியது. போன்ற ஒப்பந்தத்திற்கு முரணான செயல்பாடுகளில் பகிரங்கமாகவும் ஈடுபட்டு வந்தது.

எனவே, இத்தகைய நிலையில் சிங்களவர்களின் பாதுகாப்பு என்ற போர்வையில் ஸ்ரீலங்கா படைகள் முகாமை விட்டு வெளியே வர இந்திய அரசு அனுமதிக்குமாயின் ஸ்ரீலங்கா அரசின் மேற்குறித்த செயற்பாடுகள் யாவும் தீவிரமடைவதோடு, தமிழ் மக்களின் பாதுகாப்பு அற்றுப்போக இறுதியில் விளைவுகள் விபரீதமாக அமையும்.

சிங்களவரைப் பாதுகாக்க ஸ்ரீலங்கா படைகளும், தமிழர்களைப் பாதுகாக்க இந்தியப் படைகளும் என்ற போக்கு இங்கு நடைமுறைக்குச் சாத்தியமற்றதெனபதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இந்திய அரசு மேற்படி முடிவு குறித்து தமிழர் அமைப்புக்களுடன் ஆலோசனை செய்யாது தன்னிச்சையாக செயல்பட்டிருப்பது இந்தியா மீதான நம்பிக்கையை இழக்க வைக்கிறது.

இந்திய தமிழ் பேசும் மக்களின் நலவில் உண்மையான அக்கறை கொண்டிருக்குமாயின் மேற்படி முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் கோரப்பட்டிருக்கிறது. (இ)

## இலங்கையில் புதிய நுளம்பு

கொழும்பு, மார்ச் 23

மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் புதிய நுளம்பு ஒன்று முதல் தடவையாக இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

புதிய நுளம்பின் பெயர் 'அனுலாரிஸ் சப்பிசட்டப்' என்பது.

இதுவரை காலமும் 'அனோபிலஸ்' என்ற பெண் நுளம்பே மலேரியாவைப் பரப்பி வந்ததாகக் கருதப்பட்டு வந்தது.

மலேரியாத் தடுப்பு இயக்க டைரக்டர் டாக்டர் லயனல் சமரசிங்கா இத்தகவலை வெளியிட்டார்.

வைத்திய ஆராய்ச்சி நிலையம், மலேரியாத் தடுப்பு இயக்கம் ஆகியவற்றில் பணிபுரியும் நிபுணர்களே புதிய நுளம்பைக் கண்டுபிடித்தனர். (அ-எ)

## சிவதொண்டன் நிலைய சிவயோக சுவாமிகள் குருபூசை வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 23

எதிர்வரும் [illegible] திகதி [illegible] சிவயோக சுவாமிகள் [illegible] குருபூசை [illegible] சிவதொண்டன் நிலையத்தில் [illegible] நடைபெறவுள்ளது.

அன்று காலை [illegible] புத்துறை ஆச்சிரமத்தில் அபிஷேகம் [illegible] நடைபெறும்.

காலை 10 மணிமுதல் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி சிவதொண்டன் நிலையத்தில் திருவடி பூசை, அபிஷேகம், ஆராதனை முதலியன நிகழும்.

குருபூசையின் ஆரம்ப சாதனையாக எதிர்வரும் 26 ஆம் திகதி [illegible] கிழமை முதல் தொடர்ந்து [illegible] நாட்கள் சிவ [illegible] நிலையத்தில் [illegible] விர [illegible] டிக்கப்படும். [illegible] சேட நிறைச் [illegible] சுவாமிகள் [illegible] [illegible] பாராயணம் செய்யப்படும்.

[illegible] காலை 8 மணிக்குப் [illegible] ஆரம்பமாகும் [illegible] வழிபாடு விரதம் கேள்றும் இடம், சிவபுராணம் ஓதுகலையும் கொண்டுள்ளதாக இருக்கும்.

நண்பகலில் தியான மண்டப மௌனம், பூசை, உண்டி, ஓய்வும் பிற்பகல் 4 மணிக்குத் திருவடி பூசை வழிபாடும் இடம்பெறும். (இ)

## ஆப்கன் - பாக். பேச்சு மீண்டும் ஆரம்பம்

ஜெனிவா, மார்ச் 22

ஆப்கனிஸ்தானில் இருந்து சோவியத் துருப்புக்களை விலக்கிக் கொள்வது சம்பந்தமான பேச்சுக்கள் மீண்டும் ஜெனிவாவில் தொடங்கின.

ஐ.நா. மேற்பார்வையில் இப்பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

ஆப்கன், பாக். தூதர்கள் இப்பேச்சுக்களில் கலந்து கொள்கின்றனர்.

இ னிடையில், இப் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டைகளைப் போட்டு வருவதாக ஆப்கன்வெளியுறவு அமைச்சர் வாகில் பாகிஸ்தான்மீது குற்றம் சாட்டினார். (எ)

## அடுத்த தேர்தலுக்கு முன்னர் ராஜினாமா

### பனாமா தளபதி அறிவிப்பு

பனாமா, மார்ச் 22

அடுத்த தேர்தலுக்கு முன்னர் ராஜினாமாச் செய்வதாக பனாமாவின் இராணுவத் தளபதி ஜெனரல் நொரியாகோ அறிவித்திருக்கின்றார்.

அடுத்த ஆண்டு இப் பொதுத்தேர்தல் நடைபெறும்.

தளபதியைப் பதவிவிலகக் கோரி எதிர்க்கட்சிகள் பொதுவேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்த இரண்டாவது தினம் ஜெனரல் நொறியாகோ இத்தகவலை வெளியிட்டார்.

டெலிவிஷனில் தோன்றி அவர்பேசினர். (எ)



**பொய்யாமொழி**

குறள்:

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். [வேண்டும்

பொருள்:

இது செய்வதற்கு அருமையானது என்று [illegible] செய்வதற்குத் தக்க பெருமையை முயற்சி [illegible]

## நினைவுகள் பிரிவதில்லை!

— நவாலியூர்க் கவிராயர்

இலக்கியங்கள் மக்களுக்கு
இன்தமிழில் சேவைசெய்ய
நிலக்கிளி டானியல்போல்
நிச்சயமாய் எவர்வருவார்?

தீண்டாமை ஒழிய தனில்
தீவிரமாய் நின்றுழைத்த
தூண்டாமணி விளக்குவாய்
தோன்றியினி யார்வருவார்?

மக்களிடம் கற்றவற்றை
மதிநுட்பப் புடமிட்டே
மக்களிடம் தருவதிலே
மாவோவின் சீடன்நீ!

தோழர்களின் வாழ்க்கையதில்
தோன்றுகின்ற சிக்கலை
தோளதனில் தானேற்று
தொண்டுசெய எவருள்ளார்?

தோழர்களைத் தொலைதூரம்
தஞ்சையது சென்றதனால்;
நீளவிட்டுப் பிரிந்தனையோ
நினைவுகளோ பிரிவதில்லை!

[பிரபல எழுத்தாளர் அமரர் கே. டானியலின் இரண்டாவது மறைவாண்டு இன்றாகும்.]

## கலைவிழா - - -

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

என்றார்

மற்றும் கலைப் பேரரசு திரு ஏ. ரி. பொன்னுத்துரை, திருமதி வளர்மதி இராமலிங்கம், சட்டத்தரணி க.வே. மகாதேவன் ஆகியோர் நூல் ஆய்வுரை நிகழ்த்தினர்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. எஸ். சிவகுமாரசா, வறணி கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர், திரு. அருளானந்தம் இலங்கை இசை வேளாளர் சங்கச் செயலாளர். திரு எஸ். ஆர். ஞானசுந்தரம் ஆகியோர் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டனர்.

நூலின் ஆசிரியர் திரு. நடேசன்னன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (இ-68)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
NEW KONICA S R V 100
நிழற்படச் சுருள்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு:-
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

23.03.1988 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகட்டிவ் Processing செய்தல் இலவசம்
★ விற்பனை நிழற்படச்சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

முரசு செய்தி சேவைகள்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகரா சினிமா அருகாமை)
★ தங்கம், பவுண், வெள்ளி, பிஸ்கட் பவுண் ஆகியனவற்றை நியாயமான விலையில் விற்கவும், வாங்கவும்;
★ வெளிநாட்டு டொலர், பவுண்ட்ஸ் இந்தியப் பணம் மற்றைய வெளிநாட்டுப் பணத்தை இலங்கைப் பணமாக பாதுகாப்புடன் மாற்றவும்;
★ பாஸ்போட், விசா இன்ரநாஷனல் லைசென்ஸ், பிரயாண காசோலை ஆகியவைகளை விரைவில் பெறவும்;
★ யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு உங்கள் பணத்தையோ, பெறுமதிமிக்க பொருட்களையோ, பொதிகளையோ, கடிதங்களையோ அதி விரைவில் பாதுகாப்புடன் அனுப்பவும்;
★ முத்திரைகள், தபாலட்டைகள், உள்ளூர் — வெளியூர் — வான் தபாலுறைகள் ஆகியனவற்றை தேவைக்கேற்ப பெறவும்;
★ தட்டச்சு, கல்லச்சு போட்டோ பிரதி வேலைகளை (இருமொழியிலும்) விரைவில் செய்து பெறவும்;
★ உயிரிழப்பு அழிவு, பொருட்சேதம் ஆகியவைக்கான சத்தியக் கடதாசி தயாரித்தலும், நஷ்டஈடு கோருவதற்குமான கடிதங்கள் தயாரிக்கவும்;
★ உங்கள் நம்பிக்கைக்குட்பட்ட சேவையகம் ★
Murashu Courier Services
140, NAVALAR ROAD, JAFFNA.
(Near Manohara Cinema)

உ
சிவமயம்

திறப்பு விழா
அழைப்பிதழ்
அன்புடையீர்!
நிகழும் பிரபவ வருஷம் பங்குனித் திங்கள் 10ஆம் நாள்
23 03 - 1988 புதன்கிழமை
பகல் 11-27 மணிமுதல் 11-56 மணி
வரையுமுள்ள நல்லோரையில்,
எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்
★ வெல்கம் ஜுவல்லறி ★
Welcome Jewellery
என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து தங்களை மகிழ்விக்க இருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் சமயோசிதரும் வருகைதந்து சிறப்பிக்குமாறும், ஸ்தாபன வளர்ச்சிக்கு உதவுமாறும் அன்புடன் வேண்டிக்கொள்ளும்,
164, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம். (2126)
தங்களன்புக்குரிய
வெல்கம் ஜுவல்லறி
உரிமையாளர்

## ஊர்வலம் தடை

மட்டக்களப்பு, மார்ச் 23
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊர்வலமாகச் செல்வது மறு அறிவித்தல் வரை இந்தியப் படையினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது
(இ-21)

## யாழ் நகரில் ஐ. நா. குழு

யாழ்ப்பாணம், மார்ச்23
ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட தூதுக்குழு ஒன்று ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று யாழ் நகர் வந்து சென்றது.
இக் குழுவில் 7பேர் அடங்கியிருந்தனர்.
நேற்றுக் காலை விமானம் மூலம் பலாலியை வந்தடைந்த இந்தக் குழுவினர் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து சேதங்களைப் பார்வையிட்டனர். (இ-9)

## அ, புரத்தில்...

(1 ம் பக்கத்தொடர்ச்சி)
றும் கூறப்பட்டது
ஆனல் இச் சம்பவத்தில் 17 பேர் கொலையுண்டதாக மட்டுமே இச் செய்தி எழுதப்படும் வரை ஊர்ஜிதமாகி இருந்தது.
ஏனைய தகவல்களைச் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.
(அ-27)

## கப்பலில் ---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
வொருவருக்கும் முதற்கட்டமாக ரூபா இரண்டாயிரம் வழங்கப்படும்.
ஒரு மாதத்திற்குள் பத்தாயிரம் அகதிகள் இங்கு திரும்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது.
அகதிகளாகத் திரும்பும் ஒவ்வொருவரையும் வைத்திய பரிசோதனை செய்யும் முகமாக வைத்திய பரிசோதனைக் குழுவினரும் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.
இராமேஸ்வரத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வாரத்தில் ஒரு தடவை அகதிகள் கப்பல் சேவையில் ஈடுபடும்.
(ஒ-10)

## வவுனியா ---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
குழுக்கள் தேடுதல் வேட்டையில் இரவோடிரவாக ஈடுபட்டதால் [illegible]
இடங்களில் [illegible]

Jaffna English Academy
(A LUX IN TENEBRIS)
G.C.E. (O.L.) ENGLISH
If you want to come off with flying colours in English at the G. C. E. (Ordinary Level) December, 1988 Examination, please take the first step in the right direction by coming to us.
COMMENCEMENT: 24th March, 1988. Classes on Saturdays from 8-30 a. m. to 10 a. m. and on Thursdays from 3-30 p. m. to 5 p. m.
FEES: Rs. 35/- per month
LECTURES: KANDIAH NAVARENDRAN
9, றக்கா ஒழுங்கை
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

ஹற்றன் நாஷனல் வங்கிக்கு
எமது
நல்வாழ்த்துக்கள்
இன்று முதல் [illegible] நிலையம் முன்பாக உள்ள தமது நிரந்தரக் கட்டிடத்திற்கு மீண்டும் சேவையாற்ற வரும் வங்கிக்கு அவர்களது யாழ் கட்டிட திருத்த வேலைகளைச் செய்தவர்கள் அவர்களது [illegible] இலங்கை எங்கும் அமைந்தவர்கள் என்ற மகிழ்வோடு வாழ்த்துகின்றோம்.
மனோகரன் & வெற்றிவேல்
கட்டிட அமைப்பாளர்
49 அம்பலவாணர் வீதி,
யாழ்ப்பாணம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. [illegible]
சிவசுப்பிரமணியம் (கம்பர்)
தோற்றம்:- 16 06 1925
மறைவு: 04 04- 1987
திதி:- 23- 03- 1988
குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்ட இறைபத மெய்திய அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்
51, செட்டிதெரு ஒழுங்கை, நல்லூர். (2091)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் காளிமுத்து (மகாலிங்கம்)
ரவிச்சந்திரன் (ரவி)
மலர்வு: 31—11—1967
உதிர்வு: 23—3—1987

எமது அன்பு நிறைந்த ரவியே!

விளையாட்டுத் துறையிலே
விவேகியாய் விளங்கினாயே!
விளையாட்டுப் போல் ஓராண்டு
விரைந்தோடிச் சென்றதுவே!
மோட்டார் சைக்கிள் மெக்கானிக்காய்
நீ மேதினியில் திகழ்ந்தாயே!
உனது நட்பும் பழக்க வழக்கமும்
எம் நெஞ்சை விட்டு அகலாது.

அன்பு முகம் காணாது ஆற்றுகிறோம் நாம்.
உனது ஆத்மா சாந்தியடைவதாக!

உனது பிரிவால் ஏங்கித் தவிக்கும்
அண்ணன், நண்பர்கள்.

காளிகோவிலடி,
சன்னதிட்டி

## நீத்தார் பட்டியல்

### திரு. தேவராசா [ரெத்தினம்]

நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த தேவராசா (ரெத்தினம்) அவர்கள் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், தெய்வேந்திரன், தேவபாலன், தேவராணி, கிரிஜா, தேவகுமார், மோகனராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-3-88) புதன்கிழமை மாலை 3 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.
2123 தகவல்: திருமதி சரஸ்வதி

### திரு. என். பி. மேகநாதன்

யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு பரிசோதகர் திரு என். பி மேகநாதன் ஞாயிற்றுக்கிழமையன்று காலமாகிவிட்டார். இவர் திருமதி அருளானந்ததேவியின் (ஆசிரியை, அனலைதீவு மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், உமைசரன், அமலன் ஆகியோரின் அன்புத்தந்தையும், தெல்லிப்பளை கிழக்கு திருமதி பொன்னம்பலம், காலஞ்சென்ற திரு என். பொன்னம்பலம் ஆகியோரது அருமை மகனும், திருமதி ஜெயமலர் கணேசராசாவின் தமையனும், காலஞ்சென்ற சு. க. பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற கிராமத் தலைமைக்காரர்) தம்பதியின் மருமகனும், பால விவேகானந்தா (வீரகேசரி), ஸ்கந்தானந்தா (எண்ணெய்க் கொழுட்புக் கூட்டுத்தாபனம்), சிவானந்தா (உள்ளூராட்சித் திணைக்களம், மன்னார்), சண்முகானந்தா (துபாய்) திருமதி நித்தியானந்ததேவி கணேசலிங்கம், திரு கணேசராசா (இரத்தினபுரி மார்புநோய் சிகிச்சை நிலையம்) ஆகியோரது அருமை மைத்துனருமாவார்.
அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 10 மணியளவில் குமர கோட்டம், 385 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.
தகவல்: சிவானந்தா

### திருமதி உமாபதி (உமா)

நாவற்குழியைச் சேர்ந்த திருமதி உமாபதி (உமா) 21-3-88 திங்களன்று காலமாகிவிட்டார். அன்னார் ஆறுமுகம் விக்னேஸ்வரனின் (நவம்) அன்பு மனைவியும், திரு. கந்தையா, திருமதி இராசம்மா கந்தையா ஆகியோரின் அன்பு மகளும், திரு. க. மகேஸ்வரன் (சவூதி அரேபியா) அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி கலா மகேஸ்வரனின் மைத்துனியும், திரு ஆறுமுகம், திருமதி உத்தமி ஆறுமுகம் ஆகியோரின் மருமகளும் ஆவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.
தகவல்:
வே வரதராஜன்
(2134)

### திருமதி மாணிக்கம் பொன்னையா

ஆவரங்காலைச் சேர்ந்த திருமதி மாணிக்கம் பொன்னையா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் பொன்னையாவின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (பழனியாண்டவர்கோயில் தர்மகர்த்தா, கோண்டாவில்) பத்மாவதி, இராஜகோபால் (ஸ்ரீதேவி ரான்ஸ்போட்) புனிதவதி, பகவதி, லோகநாதன், புஸ்பவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரதேவி, செல்வரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), இராசலக்ஷ்மி, சின்னையா (இளைப்பாறிய டாக்டர்), பாலசிங்கம் (இளைப்பாறிய அதிபர்), கோணேஸ்வரி, நடேந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (23-3-88) புதன்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்: P இராஜகோபால்
[ஸ்ரீதேவி ரான்ஸ்போட்சேவிஸ்]
ஆவரங்கால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org